# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்,
சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

முறையீட்டு மனு எண். **111/2017**

ஆணை எண். **108/2017**

நாள் : **10/05/2017**

**ஜே. பிலோமின்,**
**திருச்சிராப்பள்ளி – 620 021.**

**– முறையீட்டு மனுதாரர்**

**திரு பிரகாஷ் மற்றும்**
**திரு பாலமருது,**
**வரித்தண்டலர்,**
**திருச்சி மாநகராட்சி.**

**– எதிர்மனுதாரர்கள்**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, கே.கே. நகர், இராஜாராம் சாலை, மனை எண்.47, 10–எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் ஜே.பிலோமின் அவர்களது 04.05.2017 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 05.05.2017 அன்று பெறப்பட்டு 111/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு பரிசீலிக்கப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, கே.கே. நகர், இராஜாராம் சாலை, மனை எண்.47, 10–எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் ஜே.பிலோமின் அவர்கள், 25–வது வார்டில் வரித்தண்டலராகப் பணியாற்றும் திரு பாலமருது மற்றும் அவரது உதவியாளர் திரு பிரகாஷ் ஆகிய இருவரும் தனது பெயரிலும் தன்னுடைய சகோதரர்கள் பெயரிலும் உள்ள சொத்துவரி விதிப்பினை திரு ஜசக்தி மோத்தியின் பெயரில் மாற்றுவதற்கான முன்னேற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர் எனத் தெரிவித்து அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார். மாநகராட்சிப் பணியாளர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கக் கோரும் மேற்படி முறையீட்டு மனுவினை முதலில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையரிடம் தாக்கல் செய்யுமாறு அறிவுறுத்தப்படுகிறது. மேலும், 2015–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவர் (முறையீடுகள் தாக்கல், விசாரணை மற்றும் தீர்வு செய்யப்படுதல்) விதிகளில், 6–எண்ணிட்ட விதியின் கீழ், ரூபாய் பத்து மதிப்பிலான நீதிமன்ற வில்லை,

கட்டணத் தொகையாக இம்முறைமன்ற நடுவத்திற்கு தாக்கல் செய்யப்படும் முறையீட்டு மனுவில் ஒட்டி அனுப்பப்படவேண்டும், மேலும், மேற்படி விதிகள் 4–ன் கீழ் படிவம் –1 ல் புகார் மனுவினை விண்ணப்பதாரர்கள் சமர்ப்பிக்கப்படவேண்டுமென வரையறுக்கப்பட்டுள்ளது. முறையீட்டு மனுதாரரின் மேற்குறிப்பிட்ட முறையீட்டு மனுவில் கட்டணத் தொகையாக ரூபாய் பத்து மதிப்பிலான நீதிமன்ற வில்லை ஒட்டப்படாததால், குறைபாடான மனு எனக் கருதியும் தள்ளுபடி செய்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2017– ஆம் ஆண்டு, மே திங்கள், 10–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் சென்னை–600 032

செயலாளர்.

பெறுநர்

1. ஜே. பிலோமின்,
மனை எண்.47, கதவு எண்.10, ராஜாராம் சாலை,
கே.கே. நகர் (அஞ்சல்),
திருச்சிராப்பள்ளி – 620 021.

2. ஆணையர்,
திருச்சிராப்பள்ளி மாநகராட்சி,
திருச்சிராப்பள்ளி.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்